Newspaper Reg.No.TNBIL/2003/12746, licensed to post with
prepayment with postal Reg. No. Try/041/2020 - 2022
Posted at RMS, Trichy Junction, Trichy-620 001
Date of Posting - 5th of Every Month

To

டெலிவரி ஆகாவிடில் கீழ்காணும் முகவரிக்கு தயவு செய்து திருப்பி அனுப்பவும்
**தி பிரிண்டிங் ஹவுஸ், காஜாமலை, திருச்சிராப்பள்ளி - 620 023.**

**பதிப்பாசிரியர் குழு**

1. **முனைவர் வை. சுவாமிநாதன்,** மாநிலத் தலைவர்
2. **பேரா. இ.பி. பெருமாள்,** மாநில பொதுச் செயலாளர், பதிப்பாசிரியர்
3. **முனைவர் ம. ராஜகோபால்,** மாநிலப் பொருளாளர்
4. **முனைவர் தி.ப.செ. பாரதி,** மாநிலத் துணைத் தலைவர்
5. **முனைவர் கொ. மணியன்,** மாநிலத் துணைத் தலைவர்
6. **பேரா. பார்வதி கோபாலன்,** மாநிலத் துணைத் தலைவர்
7. **முனைவர் வே. இராமசாமி,** மாநில இணைச் செயலாளர்
8. **பேரா. க. கண்ணாயம்மாள்,** மாநில இணைச் செயலாளர்
9. **முனைவர் உஷா ரகோத்தம்,** மாநில மகளிர் ஒருங்கிணைப்பாளர்

**TANRECTA SPEAKS - TNBIL/2003/12746**

Owned, Edited and Published by Prof. E. P. Perumal, The General Secretary, Tamil Nadu Retired College Teachers' Association.

Printed by S. Zeenath Beevi at The Printing House, No.6, Race Course Road, Khajamalai, Trichy-620 023. Ph : (0431) 2420121, 94435 87233
Email : tanrectatrichy@gmail.com

# TANRECTA SPEAKS

Voice - XIX February - 2022 Speech 1

**Published on 5th of Every Month**

# தமிழ் நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்

TANRECTA

**பதிவு எண். 236/2000**



*பேரா. நரசிங்கம்*

**Tamil Nadu Retired College Teachers' Association**
Newspaper Regn. No. TNBIL/2003/12746
Website: www.tanrecta.org
Rs. 4 per copy - Subscription (Annual) Rs. 40

Muthukkalathi Street,
Tiruvallikkeni,
Chennai - 600 005

## பொதுச்செயலர் கடிதம்

இனிய பேராசிரியருக்கு வணக்கம். நீண்ட நாட்களுக்கு பிறகு **TANRECTA SPEAKS** வெளியிடப்படுகிறது. நாட்டில் பல்வேறு நிகழ்வுகள் நடந்த வண்ணம் உள்ளன அவற்றைப் பற்றிய கருத்துக்கள் எதுவும் சொல்ல முடியாத இக்கட்டான நிலைமை கொரானா தொற்றால் ஏற்பட்டுவிட்டது.

கொரானா தொற்றால் இரண்டாம் அலை பரவிய காரணத்தினால் அனைத்து சங்க நடவடிக்கைகளும் முடங்கிப் போயின. தற்போது ஓமைக்ரான் என்ற தொற்று பரவிவருகிறது தொற்றுக்கிருமிகள் சமூக அளவில் பரவ நேரிட்டதால் உயிரிழப்புகள் அதிகமாய் நமது இயக்க உறுப்பினர்கள நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இது மிகவும் சோகமான செய்தி ஆகும்.

ஒன்றிய அரசு 1-1-2020 முதல் வழங்க வேண்டிய அகவிலைப்படியை முடக்கியது. மாநில அரசு அதேபோன்று அகவிலைப்படியை முடக்கியது. ஒன்றிய அரசு 1-7-2021 முதல் அகவிலைப்படியை வழங்க ஆணையிட்டது. மாநில அரசு 1-1-2022 முதல் வழங்குகிறது. அதற்கு ஒன்றிய அரசு வழியில் மாநில அரசு சென்றது ஆனால் ஒன்றிய அரசு 1-7-2021 முதல் அகவிலைப்படியை வழங்கும் நடவடிக்கையை மாநில அரசு பின்பற்றவில்லை. விலைவாசி உயர்வுக்காகத்தான் அகவிலைப்படி வழங்கப்படுகிறது. கொரானா தொற்று பரவுவதால் விலைவாசி அதிகரிக்காமல் உள்ளதா என்ன? விலைவாசியை கட்டுப்படுத்த முடியாத அரசுகள் ஓய்வூதியதாரர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு வழங்கும் அகவிலைப்படியை மட்டும் முடக்குகிறது.

கொரானா தொற்று பரவுவதின் காரணமாக அடிக்கடி பயணம் செய்து அதிகாரிகளையும் அமைச்சர்களையும் சந்திக்க இயலாத நிலைமை ஏற்பட்டது. கடந்த காலத்தில் இரண்டு முறைதான் அதிகாரிகள் மற்றும் அமைச்சர் ஆகியோரை சந்திக்க முடிந்தது. எனவே கோரிக்கைகள் தேங்கிக் கிடக்கின்றன. அரசு அலுவலகங்கள் முழு அளவில் செயல்படாமல் இருந்த காலமும் உண்டு. தற்போது முழு அளவில் செயல்பட்டாலும் கோரிக்கைகளை தீர்வு தராமல் காலம் தள்ளும் செயல் நீடிக்கிறது. கொரானா தொற்று விரைவில் குறையும். நமது இயக்க நடவடிக்கைகளை அப்போது மேற்கொள்வோம். தொடர் நடவடிக்கையின் மூலமாகவும் நமது இயக்க நடவடிக்கைகள் போராட்டங்கள் மூலமாகவும் கோரிக்கைகளை வென்றெடுப்போம் என்று நம்பிக்கையோடு நம்முடைய பயணத்தை தொடர்வோம்.

நன்றி.

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள,
**இ.பி.பெருமாள்,**
பொதுச்செயலாளர்

**எனது முகவரி :** 3/671 முதல் தெரு, ஜீவா நகர்,
கலெக்டரேட் (அஞ்சல்), தருமபுரி – 636705.
செல் : 9443334397
E.Mail : perumalep@hotmail.com





## பொதுச் செயலாளர் அறிக்கை

21.12.2021 அன்று நடைபெற்ற செயற்குழுவில் வாசித்த பொதுச்செயலாளர் அறிக்கை

இனிய பேராசிரியர்க்கு! வணக்கம்.

நமது மாநில அமைப்பின் மாநில செயற்குழு 6.3.2021 அன்று நடைபெற்றபின் மேற்கொண்ட இயக்க நடவடிக்கை பற்றிய அறிக்கை உங்கள் முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். 29.3.2021 அன்று நடைபெறவிருந்த மாநிலப் பொதுக்குழு கொரானா தொற்று பெரிய அளவில் பரவிய காரணத்தால் பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டத்தை தள்ளிப்போட வேண்டி கிளைச் செயலாளர்கள் பலர் கருத்து தெரிவித்தனர். அதனால் 29.3.2021 அன்று நடைபெறவிருந்த பொதுக்குழு தள்ளி வைக்கப்பட்டது. தற்போது அதனை நடத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அமைப்பு விதிகளின்படி ஆண்டுக்கு ஒரு பொதுக்குழு நடத்தவேண்டும் எனவும் உள்ளது. அத்துடன் அமைப்பினை புதுப்பிக்க பொதுக்குழு நடத்தி அதன் நடவடிக்கைகளை பதிவிட்டு மாவட்ட சங்க பதிவாளருக்கு சமர்ப்பித்தால் மட்டுமே அமைப்பை புதுப்பிப்பர். எனவே, மாநில பொதுக்குழுவை கூட்டவேண்டும். நேரடியாக உறுப்பினர்கள் கலந்துகொள்வதா? அல்லது காணொளியில் நடத்துவதா என்பதை இன்று முடிவு செய்யவேண்டும்.

தமிழ்நாடு அரசு கொரானா தொற்று ஒழிப்பு நடவடிக்கைகளில் தீவிரமாகப் பணியாற்றியது. பொதுமக்களிடமிருந்து நிதி திரட்ட அரசு வேண்டுகோள் வெளியிட்டது. கொரானா தொற்று உச்சநிலையில் பரவியிருந்த காரணத்தால் அரசு கட்டுப்பாடுகளை விதித்து ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டது.

நாமும் அப்பணியில் ஈடுபடுத்திக்கொள்ளும் வகையில் நமது உறுப்பினர்களிடமிருந்து நிதியைப்பெற்று அரசிடம் வழங்குவது என 2021 மே மாதம் 13-ம் தேதியன்று முடிவு செய்தோம். அதன் பின்னர் நம்மிடம் ஏற்கனவே உள்ள 12 இலட்சம் பின்னர் உறுப்பினர்கள் வழங்கிய நிதியையும் சேர்த்து 20 இலட்சம் ரூபாயை 4.6.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சரிடம் மாநிலத் தலைவர் காசோலை வழங்கினார். ஆனால் அதே நேரத்தில் தமிழ்நாடு அரசு நமக்கு வழங்கவேண்டிய அகவிலைப்படியை முடக்கியது. கொரானா காரணம், நிதிபற்றாக்குறை ஆகியவற்றை காரணங்காட்டி முடக்கியது மிகவும் கண்டிக்கத்தக்கது. கொரானா காலத்தில் விலைவாசி உயர்ந்து கொண்டுதான் உள்ளது. ஒன்றிய அரசு அகவிலைப்படியை முடக்கியது. ஆனால் 1.7.2022 முதல் வழங்க உத்தரவிட்டுள்ளது. ஆனால் தமிழக அரசு 1.1.2022 முதல் வழங்குவதாக அறிவித்துள்ளது. முடக்கப்பட்ட அகவிலைப்படியை முழுமையாக வழங்கவேண்டும்.

அதன் பின்னர் செங்கல்பட்டு மாவட்ட கிளை தொடங்கிட உறுப்பினர்கள் சிலர் விருப்பம் தெரிவித்ததின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் செங்கல்பட்டு நகரில் வாழ்ந்தோர் பழைய கிளையை புதுப்பிக்க விரும்புவதாக விருப்பம் தெரிவித்தனர். அதனால் செங்கல்பட்டு மாவட்ட கிளை தொடங்க விரும்பியவர்கள் தாம்பரம் கிளை என பெயர் மாற்றம் செய்து தற்காலிக

பொறுப்பாளர்களை காணொளியில் தேர்ந்தெடுத்தனர். அதற்கு ஆட்சிக்குழு அனுமதி அளித்தது. செங்கல்பட்டு கிளை புதுப்பிக்கவும் ஆட்சிக்குழு அனுமதியளித்தது. தாம்பரம் கிளையின் தற்காலிக பொறுப்பாளர்கள் உறுப்பினர்களை சேர்க்கும் பணியில் ஈடுபட்டு தற்போது 155 உறுப்பினர்களை சேர்த்துள்ளனர். மாநிலத் துணைத்தலைவர் பேரா.பார்வதி கோபாலன் தலைமையில் தேர்தல் குழு ஏற்படுத்தப்பட்டு முறையாக தேர்தல் அறிவிப்பு தந்து தேர்தல் நடத்தி 22.11.2021 அன்று 24 உறுப்பினர்கள் கலந்துகொண்ட பொதுக்குழுவில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டது. அதற்கு செயற்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளதை குறிப்பிட்டாகவேண்டும். 25.10.2021 அன்று கல்லூரிக் கல்வி இயக்குநரது இசைவின் பேரில் பொதுச்செயலர் துணைத்தலைவர்கள் பேரா.பாரதி, பேரா.பார்வதி கோபாலன் ஆகியோர் கலந்துகொண்டு கோரிக்கைகள் நிறைவேற்ற வேண்டி பேசினர். கல்லூரிக்கல்வி இயக்குநரும் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். அத்துடன் மாதந்தோறும் சந்திக்கலாம் என்ற கருத்தையும் தெரிவித்தார். அன்று மாலை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து கோரிக்கைகளை தந்து பேசினோம். அவர் அம்முறையீட்டில் கையொப்பமிட்டு உயர்கல்வித்துறை செயலாளரை சந்தித்து மனுக்களை தந்து பேசும்படி கூறி அனுப்பினார். 26.10.12021 அன்று உயர்கல்வித்துறையின் முதன்மைச் செயலாளர் திரு.கார்த்திக்கேயன் அவர்களை அவரது அறையில் சந்தித்து மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் கையொப்பமிட்டு தந்த மனுவை தந்து கோரிக்கைகள் பற்றி பேசினோம். அதன் பின்னர் அன்று கருவூலக் கணக்குத்துறை அலுவலகம் சென்று கோரிக்கைகளை எழுத்து மூலம் தந்து பேசியுள்ளோம்.

தற்போது கல்லூரிக்கல்வி இயக்குநர் உயர்கல்வித்துறை செயலரிடம் நமது கோரிக்கைகள் தொடர்பாக பேசியுள்ளதாகக் கூறினார். இதன் தொடர்பாக உயர்கல்வித்துறை இணைச்செயலாளரை சந்தித்து விவாதிக்கும்படி செயலாளர் இயக்குநரிடம் தெரிவித்துள்ளார். இம்மாதம் முதல் தேதியன்று 1.12.2021 திருத்தணியினின்று ஓய்வுபெற்ற பேராசிரியர்கள் 5 பேர் கூட்டாகக் கடிதம் அனுப்பியுள்ளனர். அதனில் தாங்கள் திருவள்ளுவர் கிளை தொடங்க விரும்புவதாகவும் மேலும் உறுப்பினர்களை சேர்த்து, தேர்தல் முறையாக நடத்த உள்ளதாகவும் கைபேசியில் தெரிவித்தனர். இதனடிப்படையில் 4.12.2021 அன்று ஆட்சிக்குழு திருவள்ளுவர் கிளை தொடங்கலாம் எனவும், மேலும் உறுப்பினர்களை சேர்த்து முறையான தேர்தல் நடத்தி செயல்பட அனுமதிப்பது எனவும் தீர்மானித்தது. தற்போது பேரா.அரசு ஒருங்கிணைப்பாளராகவும், பேரா.T.முனிரத்தினம் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டு புதிய உறுப்பினர்களை சேர்த்துவருகின்றனர். அதற்கு இச்செயற்குழு அனுமதி வழங்கிட வேண்டுகிறேன். அமைப்புவிதிகளின்படி ஆண்டிற்கு இரண்டு மாநில செயற்குழு கூட்டங்களை நடத்தியாக வேண்டியுள்ளதாலும் செயற்குழு உறுப்பினர்கள் செயற்குழு கூட்டம் வேண்டும் என கோரிக்கை முன்வைத்ததாலும்



TANRECTA SPEAKS JANUARY - 2022

செயற்குழுவைக்கூட்ட ஆட்சிக்குழுவில் பதிவிட்டு இன்றைய நாள் முடிவு செய்யப்பட்டது.

**TANRECTA Speaks:** சென்ற செயற்குழு கூட்டத்திற்குப் பின் **TANRECTA Speaks** இரண்டு மாதங்கள் வெளியிடப்பட்டன. கொரானா தொற்று காரணமாக கிளைகள்தங்களது பொதுக்குழுக்கூட்டங்களை நடத்த முடியாமல் போனது. எனவே, வெளியிடவில்லை . ஆனால் உறுப்பினர்களுடன் நேரடியானத் தொடர்பு கொண்டது. மாதாந்திர இதழ் நீண்டகாலமாக வெளியிடாமல் உள்ள நிலையில் தற்போதுள்ள செய்திகள் அரசாணைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு இதழ் வெளியிடலாம் என்ற கருத்தை முன்வைக்கிறேன். இனி வரும் காலங்களில் கிளைப்பொதுக்குழு நடந்த வாய்ப்புகள் உள்ளதால் 10–க்கும் மேற்பட்ட கிளைகள் கூட்டம் நடத்தினால் இதழை வெளியிடலாம் என்பதற்கு செயற்குழு உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கவும் வேண்டுகிறேன்.

**தலைமைக்கழக அலுவலகம்**

6.3.2021 அன்று நடைபெற்ற செயற்குழுவில் சென்னை முத்துகாளத்தி தெருவில் உள்ள அலுவலகத்தை விட குறைவான வாடகையில் இதைவிட வசதியான கட்டிடம் கிடைக்கும்வரை இதனில் தொடர்ந்து இருப்பது என முடிவு மேற்கொள்ளப்பட்டது. கொரானா தொற்றுக் காரணமாக வேறு இடம் எதையும் அலுவலகத்திற்காக பார்க்கமுடியாமல் போய்விட்டது. 2021 மார்ச் மாதத்திற்குப்பின் வாடகை செலுத்தாத காரணத்தால் கட்டிட உரிமையாளர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். நமது முன்பணம் 2021 டிசம்பர் முடிய உள்ள வாடகையாகக் கணக்கில் வைத்து 2022 ஜனவரி முதல் வாரத்தில் காலிசெய்யும்படி கூறியுள்ளார். எனவே, வேறு கட்டிடம் எதுவும் பார்க்காத நிலையில் இதனில் தொடருவதற்கு வாடகை நிலுவை செலுத்தி தொடரலாம் என்பது பற்றியும் முடிவு மேற்கொள்ளவேண்டுகிறேன்.

**AIFRUCTO** அகில இந்திய மாநாடு கொரானா தொற்று காரணமாக நடத்தமுடியவில்லை. எனவே, அரித்துவாரில் நடத்த இருந்த மாநாடு தள்ளிபோடப்பட்டது. ஆனால் அகில இந்திய அமைப்பின் செயற்குழுக் கூட்டம் காணொளியில் நடைபெற்றது. அதனில் தலைவரும் நானும் கலந்துகொண்டோம். அகில இந்திய **JFME** தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய கல்விக்கொள்கையை நிராகரிப்பது, விவசாயிகள் போராட்டத்திற்கு ஆதரவளிப்பது, போன்ற இயக்கங்களில் நமது ஆதரவை தெரிவித்தோம்.

நமது முன்னாள் மாநிலப் பொருளாளர் பேரா.சீத்தாராமன் அவர்கள் 7.6.2021 அன்று காலமானார். இந்த அமைப்பின் வளர்ச்சிக்கு அமரர் நரசிங்கத்துடன் சேர்ந்து உழைத்தார். அத்துடன் பேரா.தாமஸ் அவர்களுடனும் சேர்ந்து பணிபுரிந்தவர். பத்தாண்டுகளுக்கு மேல் பொருளாளராக பணியாற்றி இந்த அமைப்பு பலம்பெற பாடுபட்டவர். அவரது தியாகம் மகத்தானது. அவர் சென்னையிலிருந்தபோது பேரா.அர்ச்சுனன் அவர்களுடன் அன்றாடம் தொடர் நடவடிக்கை மேற்கொண்டவர். பொருளாளராக கழகத்தின் நிதியை திறம்பட நிர்வகித்தவர்.

Concordant Table, உயர்வூதியமாகிய 14,940/–, 1986 முதல் 1988முடிய ஓய்வு பெற்றவர்க்கான ஓய்வூதியத் திருத்தம், 2008–09–ல் மீளப்பணியமர்த்தப்பட்டவர்க்கு ஊதிய நிலுவைப், பட்டதாரிபயிற்றுநர் / விளக்குநர் ஊதிய நிர்ணயம் போன்ற கோரிக்கைகள் தேங்கிக்கிடக்கின்றன. இவற்றில் நிறைவேற்றம் காண அரசுக்கு நிர்பந்தம் தந்தாலொழிய நிறைவேறாது. எதுவும் தானாக நடக்காது, நாம் கோரிக்கைகளில் நிறைவேற்றம் காணப் போராட்டப் பாதையை தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, அது குறித்து உறுப்பினர்கள் கருத்துக்களை தெரிவித்தல் வேண்டும்.

நமது அமைப்பினை புதுப்பிக்க திருச்சி மாவட்ட சங்க பதிவாளர் அலுவலகம் 22.7.2021 அன்று சென்றபோது Online தான் என்று பதில் தந்தார். பின்னர் மீண்டும் சென்றபோது ID and password தந்தனர் அது தவறாக உள்ளது. எனவே, மீண்டும் அவ்வலுவலகம் செல்லவேண்டியுள்ளது.

---

**தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்**

பதிவு எண் 236/2000

## சுற்றறிக்கை 8/2021

**இனிய பேராசிரியர்க்கு! வணக்கம்.**

தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகத்தின் மாநில செயற்குழு கூட்டம் 21.12.2021 செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிக்கு தொடங்கி மாலை 6.30 மணி வரை திருச்சி TMSSS Empowerment Centre–ல் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநிலத்தலைவர் முனைவர் வை. சுவாமிநாதன் தலைமை தாங்கினார். மாநிலம் முழுவதிலிருந்து 21 கிளைகளில் இருந்து கலந்துகொண்டனர். மாநிலப்பொறுப்பாளர்கள் 6 பேர் பங்கேற்றனர். வந்தோரை திருச்சி கிளை செயலாளர் பேரா. அப்பாவு வரவேற்றார். மாநில இணைச்செயலாளர் முனைவர் வே. இராமசாமி 6.3.2021 அன்று திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழுக்கூட்டத்திற்கு பின்பு காலமான இயக்க உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோர் பெயர்களை வாசித்தார்.

**இயற்கையெய்தியோர் பட்டியல் (கிளை வாரியாக)**

**சென்னை கிளை :** 1. பேரா. பி.கே. பாலசுப்ரமணியன், 2. பேரா. எஸ். அப்துல்காதர், 3. பேரா. என்.வி. கேசவன், 4. பேரா. பத்மா, 5. பேரா. ரஷியா பேகம், 6. முனைவர் அ. முத்துசாமி, 7. பேரா. செல்வராஜ், 8. பேரா. வி.கலியமூர்த்தி, 9. பேரா. மணிமேகலை, 10. பேரா. உண்ணாமலை, 11. முனைவர் வனசாட்சி, 12. பேரா. சிங்கராயர், 13. பேரா. சண்முகசுந்தரம், 14. பேரா. பி. சரோஜா, 15. பேரா. சிவசுப்ரமணியன், 16. பேரா. விஜயலட்சுமி

**மதுரை கிளை :** 1. பேரா. திருநாவுக்கரசு, 2. முனைவர் போத்திரெட்டி, 3. பேரா. தேன்மொழி, 4. பேரா. கோகிலாதேவி, 5. பேரா. சந்திரமோகன்

**கன்னியாகுமரி கிளை :** 1. பேரா. ஜான் தங்கதுரை, 2. பேரா. என்.எஸ். இந்திரன் 3. பேரா. உசைன் கண்ணு, 4. பேரா. எஸ். காமராஜ், 5. பேரா. நளினா ஜெயசீலன் 6. பேரா. ஏஞ்சலின் ஜான்சன், 7. பேரா. ஆறுமுகப்பெருமாள்





**திருச்சி கிளை :** 1. பேரா. சாமிமுத்து, 2. பேரா. பி.பால்ராஜ், 3. பேரா. எ. முத்தையன் 4. பேரா. அருள்சாமி, 5. பேரா. ஜான்லூயிஸ், 6. பேரா. தணிகாசலம், 7. பேரா. அரங்கராஜன், 8. பேரா. இராஜசேகர், 9. பேரா. அப்துல்காதர், 10. பேரா. சங்கர்ராமன், 11. பேரா. பஞ்சநாதன், 12. பேரா. சம்பந்தம், 13. பேரா.மரியபுஷ்பராஜ், 14. பேரா. சபாபதி

**சேலம் கிளை :** 1. பேரா. சுப. சேதுப்பிள்ளை, 2. பேரா. எஸ். இராமசந்திரன், 3. பேரா. மனோகரன், 4. பேரா. மாரியப்பன், 5. பேரா. அலமேலு இராதா, 6. பேரா. ரஜினி, 7. பேரா. கே. நடராஜன், 8. பேரா. ரங்கராஜன், 9. பேரா. எம்.ஜெயபால், 10. பேரா. எஸ். குப்பண்ணன், 11. பேரா. நடராசன், 12. பேரா. பி.சம்பத்குமார், 13. பேரா. ஜானிபாட்சா, 14. பேரா. கே.ஆர். ரவீந்திரன், 15. பேரா. இராஜகோபால், 16. பேரா. சகுந்தலா, 17. பேரா. வெங்கடாசலம், 18. பேரா. ஆர்.கே. ரவீந்திரன்

**கடலூர் கிளை :** 1. பேரா சீத்தாராமன்

**தாம்பரம் கிளை :** 1. பேரா. மகாலிங்கம்

**பரமத்திவேலூர் :** 1. பேரா. கே. வெள்ளியங்கிரி

**கிருஷ்ணகிரி கிளை :** 1. பேரா. கே. இராமமூர்த்தி

**திருநெல்வேலி கிளை :** 1. செல்வரத்தினம் பெர்னான்டோ

**குடியாத்தம் கிளை :** 1. பேரா. என். கோட்டீஷ்வரன்

**திருவாரூர்கிளை :** 1. பேரா. இராமநாதன்

**தருமபுரி கிளை :** 1. பேரா. பி.தங்கவேல், 2. பேரா. டி. பாண்டுரங்கன்

**கோவை கிளை :** 1. பேரா. கமால் முஸ்தபா

**சிதம்பரம் கிளை :** 1. பேரா. சி. முருகேசன்

**செய்யாறு கிளை :** 1. பேரா. சுந்தரேசன்

**மயிலாடுதுறை கிளை :** 1. பேரா. சாவித்திரி, 2. பேரா. சரவணமுத்து

**விருதுநகர் கிளை :** 1. பேரா. எஸ். கலைமணி, 2. பேரா. எல். இசையரசு, 3. பேரா. ஜி. ஜெயராஜ்

**தஞ்சாவூர் கிளை :** 1. பேரா. ஜி.கணேசமூர்த்தி, 2. பேரா. டி.எம்.பி. ஹபீப்முகமது 3. பேரா. ஆர். ஆரோக்கியசாமி, 4. பேரா. பி. கிருஷ்ணமூர்த்தி (பொருளியல்)

**கும்பகோணம் கிளை :** 1. பேரா. எ.கே. தாஜிதீன், 2. பேரா. ஜி. கோவிந்தராஜன் 3. பேரா. கரோலின் விஜயா, 4. பேரா. சி.டி. திருநாவுக்கரசு, 5. பேரா. கே.எம். இராமசந்திரன், 6. பேரா. பி.வி. கலியபெருமாள்

**பழனி கிளை :** 1. பேரா. நாதன், 2. பேரா. எஸ்.பி. மாணிக்கம், 3. பேரா. இரத்தினசபாபதி

**ஈரோடுகிளை :** 1. பேரா. தங்கவேல், 2. பேரா. வெங்கடபதி

**புதுக்கோட்டை கிளை :** 1. பேரா. என். பாண்டியன்

**வேலூர் :** 1. M. தாமோதரன், 2. R. ஆனந்தன்

**பொறையாறு :** 1. ஆ. அருள்மரியநாதன்

**திருநெல்வேலி :** 1. R. செல்வரத்தினம்

**திருவண்ணாமலை கிளை :** 1. பேரா. ஏ. எஸ். சண்முகம், 2. கோதில்மொழியன் மற்றும் இந்திய பாதுகாப்பின் முப்படைகளின் தலைமைத்தளபதி பிபின்ராவத்,

முன்னாள் கல்வியமைச்சர் செ.அரங்கநாயகம், அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் AL. சிதம்பரம் ஆகியோர் காலமாகியுள்ளனர். இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேறியது.

இதனையடுத்து தலைவர் நிகழ்ச்சி நிரல் படித்தார். செயற்குழு உறுப்பினர்கள் கூறிய செய்திகளை சேர்த்து விவாதிக்கவேண்டியன பற்றி விவாதிக்கப்பட்டது. அவற்றை நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொண்டார். தாம்பரம் கிளை பற்றி பேசப்பட்டது. ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் விரும்பிய கிளையில் சேரலாம் எனவும் கிளைகள் தங்கட்கு உட்பட்ட பகுதியில் மட்டும் மாதாந்திர கூட்டங்கள் நடத்தவேண்டும் என்ற முடிவாகியதுடன் வாட்ஸ்அப்பில் வரும் செய்திகள் பற்றி பேசப்பட்டு இயக்கச் செய்திகளை மட்டும் மாநிலத்தலைமையும் கிளையும் பதிவிடல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் தலைவர் தலைமையுரையாற்றினார். நாடு தழுவிய அளவில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டம், தொழிற்சங்கங்கள், வேலைநிறுத்தப் போராட்டம், வங்கி ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம், புதிய கல்விக்கொள்கையை எதிர்த்து நடத்தப்படும் இயக்கம் போன்றன பற்றி விரிவாகக் குறிப்பிட்டார். இதன் பின்னர் அகில இந்திய ஓய்வு பெற்ற கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க பொதுச்செயலாளர் முனைவர் பார்த்தசாரதி ஓய்வுபெற்ற அரசு உதவிபெறும் ஆசிரியர்க்கு ஓய்வூதியம் இல்லாதது, அதன் தொடர்பாக நடைபெறும் போராட்டங்கள், வங்கி ஊழியர்கள் நடத்தும் போராட்டம், அகில இந்திய அளவில் உள்ள ஆசிரியர்கள் கூட்டமைப்பு, நடத்தும் புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பு போராட்டம் கல்லூரிகளில் பேராசிரியர்கள் ஊதிய நிர்ணயம், கோரிக்கைகள் தொடர்பாக மேற்கொண்ட தொடர்நடவடிக்கை ஆகியன பற்றி பேசினார். இதன் பின்னர் பொதுச்செயலாளர் இயக்க அறிக்கையை படித்ததுடன் கோரிக்கைகள் நிலை பற்றியும், நிறைவேற்றம்பெற மேற்கொண்ட தொடர் நடவடிக்கை பற்றியும், பேசியதுடன் வரும் காலத்தில் போராட்டம் நடத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது குறித்தும் அறிக்கை அளித்தார்.

பின்னர் மாநிலப் பொருளாளர் 2020-21-க்கான தணிக்கை செய்யப்பட்ட வரவு-செலவு அறிக்கையை செயற்குழுவில் சமர்ப்பித்தார். அதன் மீது உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். பின்னர் செயற்குழு அவ்வறிக்கையை நிறுத்திவைத்தது.

அதன்பின்னர், வாடகைக்கட்டிடம், கட்டிடநிதி, அமைப்பு விதிகள் திருத்தம், தெரிவித்தனர். ஒவ்வொருக்கிளையும் இவற்றின் மீது கருத்துக்களை தெரிவித்தன. பின்னர் வரும் தீர்மானங்கள் நிறைவேறின.

**தீர்மானங்கள் :**

1. ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் எந்த கிளையில் வேண்டுமானாலும் அவரவர் விருப்பப்படி சேரலாம் எனவும் கிளைகள் தங்களது மாதாந்திரக் கூட்டங்களை கிளையின் பகுதிக்குள் நடத்தவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.
2. மாநிலப் பொதுக்குழுவை 2022 ஜனவரி 25-ம் தேதி திருச்சியில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்து.



TANRECTA SPEAKS JANUARY - 2022

3. பொதுச்செயலரது அறிக்கையை ஏற்று ஒப்புதல் வழங்கியது.
4. மாநிலப் பொருளாளரின் தணிக்கை செய்யப்பட்ட 2020-21-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு அறிக்கையை நிறுத்திவைப்பதெனவும், முன்னாள் பொருளாளரை அழைத்து பிற வரவுகள் என்ற தலைப்பில் உள்ளது குறித்து தெளிவு பெறுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.
5. சென்னையில் முத்துக்காளத்தி, தெருவில் உள்ள மாநில அலுவலகம் 2022 மார்ச் மாதம் முடியும் வரை தொடர்ந்து இருப்பது எனவும், அதற்குள் ரூ.15,000-ரூ.20,000-க்குள் மாத வாடகைக்கு கட்டிடம் பார்த்து அலுவலகத்தை அவ்விடத்திற்கு மாற்றுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.
6. **TANRECTA Specks** மாத இதழை 2022 பிப்ரவரி மாதம் வெளியிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.
7. இதற்கு முன் உறுப்பினர்களிடமிருந்து வசூலித்த கட்டிடநிதி ரூ.36,79,875 தொகை நிதி செலுத்திய உறுப்பினர்க்கு திருப்பித் தருவது எனத் தீர்மானிக்கப்பட்டது.
8. நிறைவேறாத கோரிக்கைகள் தொடர்பாக தொடர் நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்வது, நிறைவேறாமல் போகும் நிலையில் போராட்டம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.
9. திருவள்ளூர் கிளை தொடங்க அமைப்புக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளதை ஏற்பதெனவும் அவ்வமைப்புக் குழு உறுப்பினர் சேர்க்கும் பணியை தொடர்ந்து நடத்தி கிளைப் பொறுப்பாளர்கள் தேர்தலை நடத்த மாநில செயற்குழு ஒப்புதல் வழங்கியது.
10. தாம்பரம் கிளை தொடர்ந்து நடத்துவதற்கு மாநில செயற்குழு ஏகமனதாக ஒப்புதல் தந்தது.
11. மூட்டாவின் மறைந்த முன்னாள் தலைவர் பேரா.சண்முக சுந்தரம் அவர்களது புதல்வர் திரு.செல்வகுமார் மனநலங்குன்றி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு தொடர்சிகிச்சையில் உள்ளார். அவருக்கு மருத்துவ சிகிச்சைக்கான செலவுகட்கு மதுரை கிளை உதவியதை பாராட்டுகிறோம். மருத்துவ செலவிற்கு தொடர்ந்து பணம் தேவைப்படுவதால் ரூ.2 இலட்சம் வழங்குவதென மாநில செயற்குழு தீர்மானித்தது.
12. அமைப்பு விதிகள் திருத்தம் மேற்கொள்ள அடுத்த கூட்டத்தில் குழு அமைப்பது பற்றி முடிவு, மேற்கொள்ளப்படும்.
13. மாநில செயற்குழு வாட்ஸ் அப்பில் மாநிலத் தலைமையும் கிளையும் இயக்க செய்திகள் மட்டும் பதிவிடல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

**கோரிக்கைகள் :**

1. தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 1986 முதல் 1988 முடிய பணியாற்றி ஓய்வுபெற்ற பேராசிரியர்கள், நூலகர், உடற்கல்வி இயக்குநர்க்கு பல்கலைக்கழக நிதியுதவிக் குழுவின் பரிந்துரையின்படி ஊதிய நிர்ணயம் செய்து ஓய்வூதியம் இதுவரையில் திருத்தப்படாமல் உள்ளது. அதற்கு முன்னரும் அதற்கு பின்னரும் ஓய்வுபெற்றவர்க்கு 2006 மற்றும் 2016-ஆம்

ஆண்டுகளில் அமுல்படுத்திய ஓய்வூதியக் குழுக்களின் ஓய்வூதியம் திருத்தப்பட்டது. 90 வயதை கடந்த இவர்கட்கு உடனடியாக ஓய்வூதியத் திருத்தம் செய்துதர தமிழக அரசை வற்புறுத்துகிறது.

2. அரசு கல்லூரிகளில் 1980 முதல் 1985 வரை நியமனம் செய்யப்பட்ட உதவிப்பேராசிரியர்கள் ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உயர்வூதியமாகிய ரூ.14,940-யை பெற்றுள்ளனர். எனவே உயர்வூதியம் பெற்றதால் ஓய்வூதியம் திருத்தியமைக்கபட அவர்களது பணிப்பதிவேடுகள் மாநிலத் - தலைமைக் கணக்காயர்க்கு அனுப்பிவைக்கப்பட்டன. அதற்கான ஓய்வூதியத் திருத்த விளக்கங்கள் அரசு மூன்றை வழங்கியுள்ளது. ஆயினும் மாநில கணக்காயர் அவற்றை ஏற்காமல் பணிப்பதிவேடுகளை திருப்பி அனுப்பியுள்ளார். அவரது இச்செயலை தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. ஓய்வூதியத் திருத்தத்தை உடனடியாகச் செய்து தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறது. தொடர்ந்து மறுத்தால் மாநிலக் கணக்காயர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்த தீர்மானிக்கிறது.

3. ஒன்றிய அரசின் ஏழாவது ஊதியக்குழுவின் அடிப்படையில் பல்கலைக்கழக மானியக்குழு அளித்துள்ள **Concordant Table**-ல் குறிப்பிட்டுள்ளவாறு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியத்திருத்தம் செய்து வழங்குமாறு தமிழக அரசை வற்புறுத்துகிறது.

4. 2008-2009-ஆம் கல்வியாண்டில் அரசு கல்லூரிகளில் மீளப் பணியமர்த்தப்பட்ட ஓய்வுபெற்ற பேராசிரியர்களுக்கு பணியாற்றிய காலத்திற்கான ஊதிய நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க நடவடிக்கையெடுக்குமாறு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

5. கல்லூரி கல்வி இயக்குனர் செயல்முறைகள் ந.க.எண்.46875/ஜெ/2018-2, நாள்: 4.10.2018- ன் உயர்துவக்க ஊதியம் பேராசிரியராக / விரிவுரையாளராக 9, **with Ph.D., 10 with M.Phil., 11** ஆண்டுகள் என பணி முடித்து மேலும் ஐந்து ஆண்டுகள் பணி புரிந்தவர்க்கு 27.7.1998 முதல் ரூ.14,940/- வழங்க ஆணையிடுகிறது. அரசு கல்லூரிகளில் பணிபுரிந்தவர்க்கு மட்டும் வழங்கப்பட்டு அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பணியாற்றியவர்க்கு வழங்காதது பாரபட்சமானது. எனவே, மேற்கண்ட ஆணையை அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பணியாற்றியவர்க்கும் 27.7.1998 முதல் ரூ.14,940/- வழங்கிட வேண்டும் என தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

6. பல்கலைக்கழக மானியக்குழுவின் ஊதியத் திருத்த ஆணையினது பரிந்துரையில் பட்டதாரி பயிற்றுநர்/ விளக்குனர்களுக்கு ஊதியம் திருத்தப்படாமல் அந்தந்த மாநில அரசுகளின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. அரசு அவர்களுக்கு முறையான ஊதியத் திருத்தம் செய்து அதற்கேற்றார் போல் ஓய்வூதியத் திருத்தம் செய்து வழங்குமாறு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.





7. பட்டதாரிப்பயிற்றுனர் / விளக்குநர்கள் ஆக பணியாற்றி உதவிப்பேராசிரியர்களாக பணிமேம்பாடு பெற்றோர் பட்டதாரி பயிற்றுநர்/ விளக்குநராக இருந்து ஓய்வுப்பெற்றால் என்ன ஓய்வூதியம் கிடைக்குமோ அதைவிட குறைவாக ஓய்வூதியம் பெறும்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த முரண்பாட்டைக் களைந்து பணி மேம்பாடு பெற்ற ஆசிரியர்களுக்கு உரிய மேம்படுத்தப்பட்ட ஓய்வூதியம் கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

8. 01.01.2020 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அகவிலைப்படி உயர்வை நிலுவைத் தொகையுடன் வழங்குமாறு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

9. 01.04.2003 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பங்களிப்பு ஓய்வூதியம் என்ற புதிய ஓய்வூதிய நடைமுறையை ரத்து செய்து பழைய ஓய்வூதிய முறையை மீண்டும் அமல்படுத்துமாறு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

10. மருந்து விலை, மாத்திரைகள் விலை, பரிசோதனைச் செலவினங்கள் அதிகரித்துவிட்டமையால், மூத்த குடிமக்களாகிய ஓய்வுப்பெற்ற பேராசிரியர்களுக்கு மருத்துவச் செலவுகள் அதிகமாகின்றன. எனவே, மத்திய அரசு வழங்குவதுபோல மருத்துவப்படியினை ரூ.1,000-ஆக உயர்த்தி வழங்குமாறு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

11. மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை விருப்ப அடிப்படையில் செயல்படுத்துமாறும் அவ்வாறு விருப்பம் உள்ளவர்களுக்கு மட்டும் ரூ.150 ஓய்வுதியத்தில் மாதந்தோறும் பிடித்தம் செய்யுமாறும் தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

12. பணியில் மூத்தோர் இளையோரைவிட குறைவாக ஊதியம் பெறுவதை மாற்றும் ஆணை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என கேட்டுக்கொள்கிறது.

13. பல்கலைக்கழக நிதியுதவிக்குழுவின் ஏழாவது ஊதியக்குழுவின்படி கல்லூரிகளில் பேராசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். அதற்கான ஊதியத்தை அமுல்படுத்தி ஓய்வுபெற்ற பேராசிரியர்க்கு அதன்படி ஓய்வூதியம் வழங்கிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறது.

மேற்கண்ட கோரிக்கைகளை அரசு உடனடியாக பரிசீலித்து தீர்வு வழங்கவேண்டும். காலதாமதம் செய்தால் ஏற்கனவே முடிவுசெய்தபடி ஆர்பாட்டம் நடத்த உள்ளோம்.

**ஒன்று படுவோம்! போராடுவோம்! வெற்றி பெறுவோம்!**

**இ.பி. பெருமாள்**

வாழ்த்துக்களுடன், தோழமையுடன்,

பொதுச்செயலாளர்

**சிக்கய்ய நாயக்கர் கல்லூரி அரசு கல்லூரியாக மாற்றப்பட்டது.**

நீண்ட கால போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி; ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி 1984 இல் இருந்து நிர்வாக சீர்கேடுகள் அதிகரித்தன. கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்கள் பாதிப்பு ஏற்பட்டதால் போராட்டம் நடத்தினர். அரசு உதவி பெறும் கல்லூரி தொடர்ச்சியாக பல்வேறு வகைகளில் ஆசிரியர்களுக்கு எதிரான விரோதப் போக்கினை கடைப்பிடித்தது. எனவே போராட்டம் தொடர்ந்தது. 1995இல் இக்கல்லூரியின் பதிவு ரத்தானது. மேலும் பிரச்சனைகள் அதிகரித்து போராட்டங்கள் தொடர்ந்தன. ஆகவேஅரசு தமிழ்நாடு அரசு தனியார் கல்லூரி ஒழுங்காற்று சட்டத்தின்படி நேரடி ஊதியம் வழங்கும் முறையை 1998இல் மேற்கொண்டது தமிழ்நாடு அரசு இரண்டாயிரத்தில் மண்டல இணை இயக்குனர் கட்டுப்பாட்டின்கீழ் கல்லூரியை கொண்டு வந்தது. ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் பொதுமக்கள் அடங்கிய பாதுகாப்பு குழு 2010இல் ஏற்படுத்தப்பட்டது. AUT தலைவர் பேராசிரியர் செந்தாமரை அதன் அமைப்பாளராக தெரிவுசெய்யப்பட்டார். இதன் பின்னர் கல்லூரி போலிநிர்வாகம் வழக்கு தொடர்ந்தது. உயர்நீதிமன்றம் உச்சநீதிமன்றம் என இழுத்தடித்து இறுதியில் தோல்வியைத் தழுவியது. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் பல்வேறு போராட்ட வடிவங்களை மேற்கொண்டது. வேலை நிறுத்தம் மறியல் உண்ணாவிரதம் என பல்வேறு போராட்டங்களை நடத்தியது. பொதுமக்கள் அரசியல் கட்சிகள் அனைத்து பகுதி ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் என அனைத்து தரப்பினரும் போராடினர். அரசு கல்லூரியை எடுத்துக்கொள்ள கோரினர். இறுதியாக கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை அரசு ஏற்பதாக அறிவித்தார். இது மக்கள் இயக்கத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். அரச நிறுவனங்களை தனியார் மயமாக்கும் கொள்கையை அரசுகள் தற்போது பின்பற்றிவரும் நிலையில் தனியார் கல்லூரியை அரசு ஏற்றது மகத்தான வெற்றி. பாராட்டுகள் வாழ்த்துக்கள்.

**விவசாயிகள் போராட்டம் வெற்றி**

விவசாயிகள் போராட்டம் வெற்றி பெற்றது. ஏறத்தாழ ஐநூறுக்கும் மேற்பட்ட விவசாய சங்கங்கள் ஒன்று கூடி ஒன்றிய அரசின் 3 வேளாண் சட்டங்களுக்கு எதிராக போராட்டம் நடத்தினர். ஒரு ஆண்டுக்கு மேலாக டெல்லியில் இப்போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்தின் போது 700 பேர் உயிர் நீத்தனர். 3 வேளாண் சட்டங்களை ஒன்றிய அரசு திரும்பப் பெறும் வரை போராட்டம் நடைபெறும் என அறிவித்தனர். உலகில் எங்குமே இது போன்ற விவசாயிகள் போராட்டங்கள் நடைபெற்றதாக தெரியவில்லை. லட்சக்கணக்கான விவசாயிகள் இதில் பங்கேற்றனர். மன உறுதியும் கொள்கைப் பற்றும் போராட்ட உணர்வு மேலோங்கி போராட்டம் தொடர்ந்ததால் மாண்புமிகு பாரதப் பிரதமர் 3 வேளாண் சட்டங்களையும் திரும்ப பெற்றார். மன்னிப்பு கேட்டார். விவசாயிகளின் ஒற்றுமை, உறுதி, போராட்டம் ஆகியவற்றிற்கு கிடைத்த வெற்றியாகும். இந்த வெற்றி வரலாற்றில் நீங்காத இடம் பெற்றுள்ளது. வாழ்த்துகிறோம் பாராட்டுகிறோம்.

**இ.பி. பெருமாள்**
பொதுச் செயலாளர்





**கிளைச்செய்திகள்**

**விருதுநகர் கிளை**

இனிய கிளை உறுப்பினர்கள் எல்லோருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல் வாழ்த்துக்கள். கொரானா தொற்று காரணமாக நமது கிளையின் கூட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நடைபெறாமல் உள்ளது. கிளை பொறுப்பாளர்களின் ஆலோசனையின்படி கிளை கூட்டம் தற்சமயம் நடத்த வேண்டாம் என்று முடிவெடுக்கப்பட்டது. நமது கிளையின் நேரடி கூட்டம் நடத்துவது பற்றி முடிவெடுத்தவுடன் உறுப்பினர்களுக்கு அலைபேசி மூலமாக தெரிவிக்கப்படும்.

21.12.2021 அன்று மாநில செயற்குழு கூட்டம் திருச்சியில் நடைபெற்றது. அதில் கிளை தலைவரும் செயலரும் கலந்து கொண்டார்கள். அதில் முக்கியமாக சங்கத்தின் பதிவை புதுப்பிக்க ஜனவரி 25 – ல் மாநில பொதுக்குழுவை கூட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் கொரானா தொற்று அதிகரித்துக் கொண்டே செல்வதால் பொதுக்குழு கூட்டத்தை கானொலி மூலமாக நடத்துவது என்று ஆட்சிக்குழுவில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த செயற்குழுவில் கட்டிட நிதி பற்றி விவாதிக்கப்பட்டது. சங்கத்திற்கு கட்டிடம் தேவையில்லை என்றும் இதுவரை வசூல் செய்த நிதியை திரும்ப உறுப்பினர்களிடம் கொடுத்துவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. நாம் தலைமை கழகத்தில் செலுத்திய கட்டிட நிதி திரும்ப கிடைக்கப் பெற்றபின் உரியவர்களுக்கு திரும்ப கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**இரங்கல் தீர்மானம்:**

19.02.2021 க்கு பிறகு இயற்கை எய்திய நமது கிளை உறுப்பினர்களுக்கும் உறுப்பினரின் துணைவியாருக்கும் இக்கிளை ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவர்களது ஆத்மா சாந்தியடைய இக்கிளை இறைவனை வேண்டுகிறது. இவர்களை இழந்து வாடும் உறவினர்கள், குழந்தைகள், நண்பர்கள் எல்லோருக்கும் இக்கிளை ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

**பட்டியல்:**

1. 26.04.21 அன்று Dr.s. கலைமணி (HOD of English, VVV கல்லூரி விருதுநகர்)
2. 17.05.21 அன்று Dr.L. இசையரசு (HOD of Zoo, ANJA கல்லூரி, சிவகாசி)
3. 15.06.21 அன்று Prof.Y. ஜெயராஜ் (Dept of Tamil ANJA) கல்லூரி, சிவகாசி) 4. 25.12.21 அன்று Prof. R. சேதுராமன் (Dept of Physics ANJA கல்லூரி, சிவகாசி) 5. 13.01.22 அன்று Prof P.S. விவேகானந்தன் (Dept of Physics ANJA கல்லூரி, சிவகாசி நமது பழைய உறுப்பினர் தற்சமயம் மதுரை கிளை உறுப்பினர்.
6. 14.01.22 அன்று Prof.S. புஷ்பராஜ் (HOD of chemistry ANJA கல்லூரி, சிவகாசி) திருச்சிகிளை உறுப்பினர்.

7. 26.04.21 அன்று Prof. C. கோகிலாமணி (Dept. of chemistry) SFR college Sivakasi w/o Prof. K. Ayyavu (Dept of BBA ANJA, Sivakasi)

பேரா. V. **ஹரிராஜன்,**

செயலர் – விருதுநகர் கிளை

**ஈரோடு கிளை**

**டிசம்பர் மாதம் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் :**

தேசிய ஓய்வூதியர் நாளான டிசம்பர் 17 ம் தேதியை ஒட்டி, டிசம்பர் மாதம் 18 ம் தேதி சனிக்கிழமை காலை 11 மணி அளவில், ஈரோடு ஒற்றுமை அரங்கில் ஈரோடு கிளையின் கூட்டம் நடைபெற்றது. 16 பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

ஒரு நிமிட அமைதி வழிபாட்டிற்குப் பின்னர், மறைந்த பேராசிரியர்கள் G. தங்கவேல், S.V. வெங்கடபதி ஆகியோருக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

செயலர்கள் அறிக்கையை வாசித்தார். பின்னர் செயலர் பேரா. N. கோகுலசந்தான கிருஷ்ணன், தேசிய ஓய்வூதிய நாளின் சிறப்பையும், அதற்கு முன்னோடியாக விளங்கிய பேரா. D.S. நகாராவைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார். மாநில செயற்குழு பற்றிய விவாதம் நடைபெற்றது. concordent table, 14940 செயல்படுத்துதல் ஆகியவற்றை வலியுறுத்துமாறும், கிளையின் சார்பாக பொருளர் Dr. S. ராமசாமியை அனுப்புவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து குன்னூர் ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த ஜெனரல் பிபின்ராவத் மற்றும் 13 பேரின் இறப்பிற்கு அஞ்சலி செலுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவர்களது தியாக உணர்வு நம் நெஞ்சில் என்றும் நிழலாகும் என்று உறுப்பினர்கள் உணர்ச்சியுடன் உணர்த்தினர். புத்தாண்டு வாழ்த்துக்களை செயலர் உரித்தாக்கி நன்றி நவின்றதுடன், தலைவர் முறைப்படி கூட்டத்தை ஒத்தி வைத்தார்.

பேரா. **என். கோகுலச்சந்தான கிருஷ்ணன்,**

செயலர் – ஈரோடு கிளை

## மதுரைக் கிளை

**பொதுக் குழு சுற்றறிக்கை :** 11.01.2022 அன்று காலை 10.30 மணிக்கு மூட்டா அலுவலகம் Prof.V. சண்முகசுந்தரம் அரங்கில் கிளையின் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

**வரவேற்புரை :** கிளையின் இணைச் செயலாளர் Prof.K.V. ஆனந்தன் பொதுக்குழுவிற்கு வருகைபுரிந்த அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நல்கினார்.

**தலைமையுரை :** பொதுக் குழுவிற்கு வருகைபுரிந்த அனைவரையும் வரவேற்று கிளைத் துணை தலைவர் Dr.G. ஜெகநாதன் தலைமையுரையாற்றினார்.

**இரங்கல் தீர்மானம் :** நமது கிளை உறுப்பினர் Dr. ஜான்சி வனிதாமணி அவர்களின் கணவர் அவர்களின் மறைவிற்கு கிளையின் சார்பில் ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப்பட்டு அனைவரும் எழுந்து நின்று 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.





**பிறந்தநாள் வாழ்த்துக்கள் :** இந்த மாதம் பிறந்தநாள் கண்ட பேராசிரியர்களின் பட்டியலை கிளையின் இணைச் செயலாளர் Prof. K.V. ஆனந்தன் படித்தார். இந்த மாதம் பிறந்தநாள் கண்ட பேராசிரியர்கள் Dr. லக்ஷ்மணன், Dr. சாம்பசிவம் மற்றும் K.S. சுப்ரமணியன் ஆகியோர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து கிளையின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும் மதிய உணவிற்காக மூவரும் ரூபாய் 500 வீதம் வழங்கினார்கள்.

**புதிய உறுப்பினர்கள் அறிமுகம் :** புதிய உறுப்பினர் Dr.S.K. சுப்ரமணியன் தன்னை கழகத்தில் புதிய உறுப்பினராக இணைத்துகொண்டு தன்னைப்பற்றி சுயஅறிமுகம் செய்துகொண்டார்.

**செயலாளர் அறிக்கை :** 14.12.2022 அன்று நடந்து முடிந்த முப்பெரும் குடும்ப விழா மிகச் சிறப்பாக நடந்து முடிந்ததற்கு அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் நன்றியும் மகிழ்ச்சியும் தெரிவிக்கப்பட்டது.கடந்த 17.12.2021 அன்று ஓய்வுஊதியர் தினம். அன்று நமது கிளை உறுப்பினர்கள் தமிழ்நாடு ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்கம் சார்பில் நடைபெற்ற ஓய்வுஊதியர் தின நினைவு கூட்டத்தில் பங்கேற்று ஓய்வு ஊதியர் தின முக்கியத்துவம் பற்றி பேசினார்கள்.21.12.2021அன்று திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழுவின் முடிவுகள் பற்றி முழுமையாக விளக்கப்பட்டது. முக்கியமாக நமது கிளையின் வேண்டுகோளை ஏற்று மாநில செயற்குழு Prof.V. சண்முகசுந்தரம் அவர்களின் மகன் S. செல்வகுமாரின் மருத்துவ செலவிற்காக மருத்துவ நிதி உதவி ரூபாய் 2,00,000/– மாநில செயற்குழுவால் மாநில நிதியிலிருந்து வழங்குவது என்று அறிவிக்கப்பட்டது. 23.12.21 அன்று கருவூலம் சென்று கருவூல அதிகாரி திரு. பாலமுருகன் மற்றும் கருவூல இணை இயக்குனர் திரு R. முரளி ஆகியோர்களை கிளையின் சார்பில் கிளைச் செயலாளர் Dr.N. பெரியதம்பி மற்றும் கிளையின் இணைச் செயலாளர் Prof.K.V. ஆனந்தன் ஆகியோர்கள் சந்தித்து தின நாள் காட்டி மற்றும் தினக் குறிப்பேடு வழங்கி புத்தாண்டு வாழ்த்து தெரிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். 27.12.2021 அன்று கிளைத் தலைவர் Dr.A. மனோகரன் கிளைச் செயலாளர் Dr.N. பெரியதம்பி மற்றும் கிளையின் துணைத்தலைவர் Dr.G. ஜெகநாதன் ஆகியோர்கள் மதுரை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் அலுவலகம் சென்று கல்லூரி கல்வி இணை இயக்குனர் Dr. பொன்முத்துராமலிங்கம் மற்றும் உதவி இயக்குனர் திரு. இளங்கோ ஆகியோர்களை சந்தித்து நாள்காட்டி மற்றும் குறிப்பேடு வழங்கி புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள்.திருவாத உடையார் திருவிளையாடல் புராணத்திற்கு முதன் முதலில் உரை எழுதியதால் உரை வேந்தர் விருது பெற்ற Dr. முத்துசாமி அருணகிரி அவர்களுக்கு கிளையின் சார்பில் பாராட்டுக்கள் மற்றும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. மேலும் Dr. பாபுராஜ் சுப்பு சிறந்த இயற்கையாளர் என்ற பாராட்டை யூ டீப் மற்றும் கூகுள் மேப் வழங்கியள்ளதற்கு கிளையின் சார்பில் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டு பாராட்டப்பட்டார். மேலும் கிளையின் சார்பில்

பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். Prof.V. சண்முகசுந்தரம் மகன் S. செல்வகுமாரின் மருத்துவ செலவு தொடர்பாக கிளைத் தலைவர் வந்தவுடன் விவாதித்து அது தொடர்பாக உரிய முடிவுகள் மேற்கொள்ளப்படும். இன்றைய மதிய உணவினை வழங்கிய Dr.P.T. மனோகரன் அவர்களுக்கு கிளையின் சார்பில் வாழ்த்துகளுடன் பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டது.

**தீர்மானங்கள்**

1) எதிர்வரும் 25.01.2022 அன்று நடைபெறவிருக்கும் காணொலி பொதுக்குழு கூட்டத்தை தற்போது உள்ள பொருந்தொற்று சூழல் காரணமாக தள்ளிவைத்து சாதகமான சூழலில் நேரடியாக மாநில பொதுக்குழுவை நடத்த வேண்டுமாய் மாநில ஆட்சிக்குழுவை கிளைப் பொதுக்குழு (11.01.2022) கேட்டுக்கொள்கிறது.

2) முன்னாள் muta நிறுவனர் Prof. V. சண்முகசுந்தரம் அவர்களின் புதல்வன் திரு. செல்வகுமாரின் மருத்துவ செலவை இதுவரையில் செய்துவந்த மதுரை கிளைக்கு மாநில செயற்குழு நன்றி தெரிவித்துக்கொண்டது.

3) Prof. V. சண்முகசுந்தரம் அவர்களின் மகன் செல்வகுமாரின் மருத்துவ செல்வினங்களுக்காக ரூபாய் 2,00,000 நரசிங்கம் டிரஸ்ட் நிதியிலிருந்து வழங்குவது என செயற்குழுவில் மாநிலச் ஆட்சிக்குழு அறிவித்தது.

4) டெல்லியில் போராடி வெற்றிபெற்ற விவசாயிகளுக்கு பாராட்டுகளும் வாழ்துக்களும் தெரிவிக்கப்பட்டது.

5) Prof.V. சண்முகசுந்தரம் மகன் செல்வகுமாருக்காக வசூல் செய்த மருத்துவ நிதி நிலுவை எதுவும் இருப்பின் அதை முழுமையாக வழங்கவும் பொதுக்குழு ஒப்புதல் அளித்தது.

**நன்றியுரை** : Dr.R. வள்ளி கிளையின் பொருளாளர் பொதுக்குழுவிற்கு வருகைபுரிந்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

Dr.R. **பெரியதம்பி**
செயலாளர் – மதுரை கிளை

**விழுப்புரம் கிளை**

விழுப்புரம் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 12. 12. 2021 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு விழுப்புரம், வி. ஆர். பி. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கிளைத் தலைவர் பேரா. மு. வரதராசலு அவர்களது தலைமையில் நடைபெற்றது. வருகைபுரிந்த உறுப்பினர்களை கிளைப் பொருளாளர் பேரா. எஸ்.வி. சுப்புராம் அவர்கள் வரவேற்று உரையாற்றினார். கூட்டத்தின் முதல் நிகழ்வாக இக்கிளையின் உறுப்பினர் பேரா. முனைவர் எம். ஏ. சின்னதம்பி அவர்கள் 24. 05. 2021 அன்று இயற்கை எய்தியமைக்கும், 08.12. 2021 அன்று குன்னூர் ஹெலிகாப்டர் விபத்தில் மரணமடைந்த முப்படைத் தளபதி பிபின் ராவத் உள்ளிட்ட ராணுவ அதிகாரிகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

திங்கள் ஒரு குறள் என்ற வகையில் பேரா. இர. நிசார் அவர்கள் கல்வி என்னும் அதிகாரத்தில் பின்வரும் குறளின் விளக்கத்தினை அளித்தார்:





**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு (குறள் 396)**

கிளைத் தலைவர் தமது தலைமை உரையில் பேரா. எம். ஏ. சின்னதம்பி பற்றி நினைவு கூர்ந்தார். கிளைச் செயலர் தமது அறிக்கையில் மாநில மற்றும் கிளைச் செய்திகளைத் தெரிவித்தார். தொடர்ந்து, வரும் 21.12.2021 அன்று திருச்சியில் நடைபெற உள்ள மாநில செயற்குழுவில் நமது கிளை சார்பாக சொல்லவேண்டிய செய்தி பற்றியும், சமீப காலமாக சமூக ஊடகங்களில் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கு இடையே நடைபெற்றுவரும் கருத்து மோதல்களையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார். இது சம்பந்தமாக தொடர்ந்து பேசிய உறுப்பினர்கள் தமது கோபத்தையும் கவலையையும் தெரிவித்தனர். பின்னர் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன.

தொடர்ந்து 2021-22 க்கான வருமான வரி கணக்கீட்டுப் படிவம் அனைவருக்கும் வழங்கப்பட்டது. இறுதியில் பேரா. முனைவர் ந. கன்னையா அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவடைந்தது.

**பொதுக்குழுவின் தீர்மானங்கள் முடிவுகள்:**

1. இக்கிளை உறுப்பினரும் விழுப்புரம் அரசு கல்லூரியின் முன்னாள் தமிழ்த் துறைத்தலைவருமான பேரா. முனைவர் எம்.ஏ. சின்னதம்பி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் இப்பொதுக்குழு தெரிவித்துக்கொள்கிறது. முப்படைத் தளபதி பிபின் ராவத் உள்ளிட்ட ராணுவ அதிகாரிகளின் மரணத்திற்கும் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் இப்பொதுக்குழு தெரிவித்துக்கொள்கிறது.
2. TANRECTA வில் புதிய கிளைகள் துவக்குவது வரவேற்கத் தக்கது என்றாலும், அதற்காக ஒரு கிளையை அதன் ஒப்புதல் இல்லாமல் உடைத்து புதிய கிளையை உருவாக்குவது என்பது ஏற்புடையது அன்று. அதுவும் இப்பெருந்தொற்று காலத்தில் இயக்கமே அதன் செயல்பாடுகள் அற்று முக்கிய செயல்பாடுகள் முடங்கி இருக்கின்ற சூழலில் ஒரு சாராருக்காக எடுக்கப்படும் இதுபோன்ற நிகழ்வுகள் சங்கத்தை பலவீனப்படுத்துமே அன்றி ஒருபோதும் பலப்படுத்தாது. TANRECTA ஒரு தொழிற்சங்க அமைப்பே அன்றி அரசியல் கட்சி அல்ல. எதற்கெடுத்தாலும் ஆட்சிக்குழு பெரும்பான்மை என்ற பொதுச் செயலரின் கூற்று ஏற்புடையது அன்று. ஆட்சிக் குழு பெரும்பான்மை என்பதற்காக ஆட்சிக்குழு சொல்வதை எல்லாம் விழுப்புரம் கிளை ஏற்காது என்பதை இப்பொதுக்குழு ஆணித்தரமாக தெரிவித்துக்கொள்கிறது.

மாநில ஆட்சிக்குழுவிற்குமேல் மாநில செயற்குழு, அதற்குமேல் மாநிலப் பொதுக்குழு என்பதை பல்லாண்டு காலம் பொறுப்பில் இருக்கும் ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்ட வேண்டிய நிலையில் இருப்பது உண்மையிலேயே வருத்தத்தை அளிக்கிறது. தொடர்ந்து இந்நிலை நீடிக்குமானால் விழுப்புரம் கிளை மாநில அமைப்பிலிருந்து விலகும் சூழல் ஏற்படக்கூடும் என்று தீர்மானிக்கிறது.

3. மாநில ஆட்சிக்குழுவில் ஐந்து பேர் கொண்ட அமைப்பே போதுமானது. இணை, துணைப் பொறுப்புக்கள் தலைவர், பொதுச்செயலரின் பதவிகளுக்கு உதவி புரிவதற்காகவே அன்றி அவர்களின் உரிமையைப் பறிப்பதற்கு அல்ல. தலைவர், பொதுச்செயலர், பொருளர் என்பது முக்கிய பொறுப்புகள் ஆகும். இதனோடு, இணை, துணைப் பொறுப்புகளை சமப்படுத்துவது என்பது ஏற்புடையது அன்று. எனவே, தலைவர், பொதுச்செயலர், பொருளர், துணைத் தலைவர், இணைச் செயலர் என்ற ஐந்து பதவிகளே போதுமானது. இதற்குமேல் எந்த ஒரு பதவியும் தேவையற்றது என்று இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது. இதனை வரும் தேர்தலிலிருந்து அமுல்படுத்திட ஏதுவாக உடனடியாக அமைப்பு விதித் திருத்தம் மேற்கொள்ள குழு ஒன்றை இச்செயற்குழுவிலேயே அமைத்திடவேண்டும் என்றும் இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

4. சென்ற மாநில செயற்குழுவில் கட்டிட வாடகைபற்றி விவாதிக்கப்பட்டு, அந்த ஆண்டு ஒப்பந்தத்துடன் முடித்துகொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் கிட்டத் தட்ட ஒன்பது மாதங்கள் கடந்தும் வாடகை பாக்கி உள்ளதாக பொதுச்செயலரின் தகவல் உண்மையிலேயே அதிர்ச்சி அளிக்கிறது. இதற்கு யார் பொறுப்பு? ஒரு வருட வாடகையை யார் தருவது? வரும் காலங்களில் உறுப்பினர் எண்ணிக்கைக் குறையக்கூடும் என்பதால் சென்னையில் நிரந்தர இடமோ, கட்டிடமோ தேவை இல்லை. எனவே கட்டிட நிதியும் தேவை இல்லை என்றும் இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

**பேரா. முனைவர். மு. சேகர்,**
செயலர், விழுப்புரம் கிளை. செல்: 94437 29660.

## செய்யாறு கிளை

### மாதாந்திர கூட்ட அறிக்கை - திசம்பர் - 2021

செய்யாறு கிளையின் திசம்பர் மாத கூட்டம் 15.12.2021 அன்று ஓய்வு பெற்ற அலுவலர் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைமை தாங்கிய கிளைத்தலைவர் பேரா.சீனிவாசசெட்டி அவர்கள், நடுநிலைமை அதிகாரத்திலிருந்து,

**நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**
**அன்றே யொழிய விடல்**

என்ற குறளை பொருளுடன் விளக்கி கூட்டத்தை தொடங்கி வைத்தார். 26.10.2021 அன்று இயற்கையெய்திய எம் கிளை உறுப்பினரும் செய்யாறு கல்லூரியில் நீண்ட நாள் பணியாற்றி ஓய்வுபெற்றவரும் ஆன்மீக செம்மலான தமிழ்ப் பேராசிரியர் திரு மா.சுந்தரேசன் அவர்களுக்கு புகழஞ்சலிக்குப் பின் இரண்டு நிமிடங்கள் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. சென்ற கூட்டத்திற்கும் இந்த கூட்டத்திற்கும் இடையிலான காலத்தில் பிறந்த நாள் கண்ட பேராசிரியர்கள் ஆர்.வி. ரகுராமன், டி. சங்கரலிங்கம், டாக்டர்.எஸ், ஜேசுராஜ், லாசரஸ் ஞானசுந்தரம், டாக்டர்.மு.தேவதாஸ், டாக்டர் கோ.மணி ஆகியோருக்கும் மணநாள் கண்ட





பேராசிரியர்கள் ஆர்.வி. ரகுராமன், லாசரஸ் ஞானசுந்தரம், டாக்டர் எம்.ராஜேந்திரன், ஜி. சுடலையாண்டி, டி.ஜி.நாகராஜன், வேணு. சிவப்பிரகாசம், டாக்டர் கோ.மணி ஆகியோருக்கும் வாழ்த்துகள் தெரிவித்து பாராட்டப்பட்டது.

**தீர்மானங்கள்:**

1. மாநில ஆட்சிக்குழுவில் தற்போது நடைபெற்றுவரும் உள்மோதல் குறித்து உறுப்பினர்கள் பெரும் கவலை தெரிவித்தனர். இதனால் நம் சங்கத்தின் செயல் பாடுகளில் மிகப்பெரும் பின்னடைவே அடையக்கூடும். எனவே ஆட்சிக்குழுவினரின் இத்தகைய போக்கை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இனிவரும் காலங்களிளாவது அவர்கள் இணைந்து பணியாற்ற வேண்டும் என இக்கிளை கேட்டுக்கொள்கிறது.
2. 06.03.2021 அன்று இருந்த கோரிக்கைகளனைத்தும் இன்னும் தீர்க்கப்படாத நிலையில் அதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள தலைமையை இக்கிளை வலியுறுத்துகிறது.
3. இந்நிதியாண்டுக்கான வருமான வரி படிவத்தை தயாரிக்க டாக்டர் ஆர். அஞ்சப்பன் அவர்களை இப்பொதுக்குழு ஒருமனதாக நியமித்தது.
4. கிளையின் கூட்டங்களை இனி கல்லூரி வளாகத்திலேயே நடத்திட தீர்மானிக்கப்பட்டது.

**டாக்டர்.சா. முத்தழகு,**
கிளை செயலர் – செய்யாறு கிளை

## குடியாத்தம் கிளை

குடியாத்தம் கிளையின் பொதுக்குழு கூட்டம் இணையம் மூலம் 18.12.2021 அன்று நடைபெற்றது. 21.12.2021 அன்று திருச்சியில் நடைபெற உள்ள மாநில செயற்குழு கூட்டம் பற்றி விவாதிக்கப்பட்ட பிறகு பின்வரும் செயற்குழு தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

**தீர்மானம் 1 :** ஆட்சிக்குழுத் தேர்தலின் போது விதிமுறைகள் பற்றி அழுத்தம் திருத்தமாக பேசிய தலைவர் தற்போது தன்னிச்சையாக விதிமுறைகளை மீறி செயல்படுவது கண்டிக்கத்தக்கது. நிலுவையில் உள்ள பல கோரிக்கைகளை தற்போதுள்ள இணக்கமான சூழ்நிலையில் வென்றெடுப்பதைவிடுத்து, தனிநபர் மனமாச்சரியங்களை முன்னிலைப்படுத்தி, சங்க வளர்ச்சிக்கு முட்டுகட்டையாக இருப்பதை குடியாத்தம் கிளை வன்மையாகக் கண்டிக்கிறது.

(புதிய கிளை தொடங்க மாநில செயற்குழு அனுமதி பெற வேண்டும் என மீண்டும் மீண்டும் தலைவர் கழக விதிகளில் இல்லாததை வலியுறுத்துகிறார்)

**தீர்மானம் 2:** நிலுவையிலுள்ள கோரிக்கைகளை முழுமையான அகவிலைப்படி மற்றும் அதற்கான நிலுவைத் தொகை ஒப்பளிப்பு, **Concordant Table** ஏற்கச் செய்வது, அரசு நிதியுதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் ரூபாய் 14940 உயர் துவக்க ஊதியம் விரிவுபடுத்துதல், அதனை தொடர்ந்து ஓய்வூதிய திருத்தம் ஆகியவற்றை மிகத்தீவிரமாக முன்னெடுத்து ஆட்சிக்குழு சாதிக்க வேண்டுமென இக்கிளை வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 3:** நம் கழகத்திற்கான விதிமுறைகளை திருத்துவதற்கான ஒரு குழுவை இந்த செயற்குழுவிலேயே அமைத்து, இந்த ஆண்டில் நடைபெறவுள்ள பொதுக்குழுவில் ஒப்புதலை பெற்று நடைமுறைபடுத்த வேண்டும் என குடியாத்தம் கிளை தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 4:** தவிர்க்க இயலாத காரணத்தினால் கிளைச் செயலர் திருச்சியில் நடைபெற உள்ள மாநில செயற்குழு கூட்டத்தில் கிளைச் செயலர் கலந்து கொள்ள இயலாத நிலையில் கிளையின் பொருளர் முனைவர் திரு. சு. சக்கரவர்த்தி அவர்கள் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு மாநிலத் தலைவர் அவர்களை இக்கிளை கேட்டுக்கொள்கிறது.

**பேரா. கு. நடராசன்**
கிளைச் செயலர் – குடியாத்தம் கிளை

## தஞ்சாவூர் கிளை - பொதுக்குழுக் கூட்டம்

எமது கிளையின் பொதுக்குழுக்கூட்டம் 12.12.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு தஞ்சை மன்னர் சரபோஜி அரசுக்கல்லூரியில் நடைபெற்றது. கிளைத்தலைவர் பேரா.ஆ.இராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். முதற்கண் சமீபத்தில் ஹெலிகாப்டர் விபத்தில் அகால மரணமடைந்த இந்திய ராணுவத்தின் முப்படைத்தலைவர் பிபின் ராவத் மற்றும் பன்னிரண்டு பேர் மற்றும் உறுப்பினர் பேரா.வீ.இராசகோபாலன் (முன்னாள் பாரதிதாசன் பல்கலைக்கழக தேர்வு நெறியாளர், முன்னாள் கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்) ஆகியோரின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் கிளைச்செயலாளர் முனைவர் அ. பன்னீர்செல்வம் அவர்கள் வரவேற்றுப்பேசினார். பின்னர் நவம்பர் மற்றும் டிசம்பர் திங்களில் பிறந்தநாள் கண்ட மற்றும் காணவுள்ள பேராசிரியர்கள் 20 பேருக்கு கிளையின் சார்பாக பிறந்தநாள் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது. பிறந்தநாள் காணும் பேராசிரியர்களில் கூட்டத்திற்கு வருகை தந்த திரு.கே.ஜெயராமன் மற்றும் திருமதி. எம். கமலா ஆகியோருக்கு கைத்தறித்துண்டு போர்த்தி சிறப்பிக்கப்பட்டது.

மாநில இணைச்செயலாளர் பேரா. முனைவர் வே. இராமசாமி, கொரானா தொற்றினால் சங்க நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தொய்வு, நமது கோரிக்கைகள் தொடர்பாக தலைமை எடுத்துள்ள தொடர் நடவடிக்கைகள் என்பனபற்றி எடுத்துரைத்தார். உறுப்பினர்கள் கருத்துரைக்குப்பின் இணைச்செயலாளர் பேரா.முனைவர் சா.சிவ. இராஜேந்திரன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

**தீர்மானங்கள்:**

1. 14940/= உயர் ஊதியம் தொடர்பாக அரசு உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி களைய தலைமைக்கழகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிளை வலியுறுத்துகிறது.
2. புதிய ஓய்வூதியம் தொடர்பான UGC-யின் Concordant Table-படி புதிய ஓய்வூதியம் பெற நடவடிக்கையெடுக்குமாறு தலைமைக்கழகத்தை கிளை கேட்டுக் கொள்கிறது.





3. கொரானா தொற்றினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அகவிலைப்படி உயர்வை மத்திய அரசு வழங்கியது போல் தமிழக அரசும் வழங்க உரிய நடவடிக்கையெடுக்க தலைமைச் கழகத்தை வலியுறுத்துகிறது.

முனைவர் **அ. பன்னீர் செல்வம்**
செயலாளர் – தஞ்சாவூர் கிளை

## சேலம் கிளை

சேலம் கிளை மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டத் தீர்மானங்கள் தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழக, சேலம் கிளையின் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டம் 21.01.2022 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு சேலம்-7, அரசு கலைக்கல்லூரி, அறை எண். 49-ல் கிளைத்தலைவர் பேரா.முனைவர் பெ.மாது அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிளைத்தலைவர் வரவேற்புரையாற்றி சென்ற பொதுக்குழுவிற்கும், இப்பொதுகுழுவிற்கும் இடையில், இயற்கையெய்திய உறுப்பினர் பேரா.V.பாலசுப்ரமணியம், ஆங்கிலத்துறை மறைவு நிகழ்வை கூறி இரங்கல் தீர்மானம் முன்மொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் கிளைச்செலயர் 21.12.2022 அன்று திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழு செய்திகள், தீர்மானங்கள் முதலியவற்றை விளக்கி கருத்துரை வழங்கினார். கிளைபொருளர் கிளையின் நிதிநிலை விபரம் மேனாள் செயலர் அவர்களிடமிருந்து இயக்கம் தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொண்ட செய்திகள் பற்றி கூறினார். தொடர்ந்து கிளைத்தலைவர் தனது உரையில் சேலம் கிளையில் 4.1.2022 அன்று நடந்த ஆட்சிக்குழு கூட்டத்தில் **TANRECTA** மாநில பொதுக்குழு கூட்டம் பல்வேறு பிரச்சனைகளை விவாதிக்கும் பொருட்டு காணொளியில் நடத்தாமல் நேரடியாக நடத்த வேண்டுமென தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு மாநில பொதுச்செயலர் மற்றும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை கூறினார். தொடர்ந்து தனது உரையில் மாநில பொறுப்பாளர்களிடையே நிலவிவரும் முரண்பாடுகள், TANRECTA வரவு செலவு தணிக்கை அறிக்கை, வாடகை கட்டிடம், 25.1.2022 அன்று காணொளி காட்சி வாயிலாக நடைபெற உள்ள கூட்டம் முதலியவற்றை பற்றி பேசினார். இதன்பின்னர் உறுப்பினர்கள் கருத்துகள், விவாதங்கள் முதலியவற்றின் அடிப்படையில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானங்கள் :**

1) சேலம்-7 கிளையின் 4.1.2022 அன்று நடந்த ஆட்சிக்குழுக் கூட்ட தீர்மானத்தின்/வாயிலாக TANRECTA மாநில பொதுக்குழு கூட்டம் 25.1.22 அன்று நடைபெறுவது ஒத்தி வைக்க வேண்டும் என்றும், கொரனா மற்றும் ஓமைக்ரான் தொற்று நிலையைக் கருத்தில் கொண்டு இயக்க பிரச்சனையை நேரடிய விவாதித்து முடிவெடுக்க ஏதுவாக காணொளி கூட்டத்திற்கு பதிலாக நோய் பரவல் சரியாகும்பட்சத்தில் நேரடியாக கூட்டம் நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தை மீண்டும் வலியுறுத்துவது என ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

2) 2019-2020 ஆண்டுக்கும் 2020-2021 ஆண்டுக்கும் TANRECTA வரவு செலவு தணிக்கை அறிக்கை கிளைகளுக்கு அனுப்பாத சூழ்நிலையில் எவ்வாறு

காணொளி கூட்டத்தில் ஒப்புதல் கொடுக்க முடியும். எனவே, மேற்கண்ட இரண்டு ஆண்டுகளுக்குரிய தணிக்கை அறிக்கை கிளைகளுக்கு அனுப்பி பின்னர் நேரடியாக மாநில பொதுக்குழு கூட்டத்தில் ஒப்புதல் பெற ஏதுவாக 25.1.2022 அன்று நடைபெற உள்ள காணொளி பொதுக்குழு கூட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

3) பல்வேறு இயக்க தொடர்பான பிரச்சனைகளை காணொளி மூலம் விவாதிக்க முடியாது என்பதால் சேலம் கிளை மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் 25.1.2022 கூட்டத்தில் கலந்து கொள்ள மாட்டார்கள் எனவும் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

பேரா.**மா.சுபாஷ்சந்திர போஸ்**
செயலாளர், சேலம் கிளை

## PUDUKKOTTAI UNIT

The general body of this unit met on 9/1/22.Unit vice President prof.V.Vembaiyan presided.The following resolutions were adopted.

1. The revised D.A rates should be applied from the same dates on par with central government staff. If the arrears could not be given in cash, the option of giving it in government bonds may be considered.
2. The medical allowance may be enhanced to Rs.1000 per month.

Prof **G. Manivannan**
Secretary, TANRECTA,Pudukkottai.

## TAMBARAM UNIT

**Election of Tanrecta Tambaram unit office bearers**

1. Date of announcement of Elections 16/10/2021
2. Last date for filing nomination 31/10/2021, 10 am
3. List of valid nominations 31/10/2021, 4 pm
4. Last date for withdrawal of nominations 3/11/2021, 10 am
5. Final list of valid nomination 3/11/2021, 11 am
6. Elections (if necessary ) 2 pm to 4 pm on 13/11/2021
7. Venue for elections Gym hall, Jain Apartments, Chennai
8. Election committee
   - Prof Parvathy Gopalan (convener)
   - Prof Maheshwari
   - Prof Mallika Madhavan

The Election committee convener declared that the schedule has been scrupulously followed. In response to the call for nominations by the election commission, Prof Parvathy declared the following final list of valid nominations as duly elected for the period up to 31.12.2022.

1. President - Felicia Rajammal Selvarani
2. Vice President - Patricia Gabriel
3. Secretary - Lawrence R
4. Joint Secretary - Nedunchezhian T
5. Treasurer - Annie Isabella SA





**General Council Members :** 6. Lakshmi S, 7. Mahalingam V

Prof. Parvathi Gopalan invited the elected office bearers of the Unit to take - Charge and conduct the proceedings.

The President, Prof. Felicia thanked the members of the Unit for the faith reposed by them in the unit office bearers. She assured the members that the members were free to bring any common or individual issue to the notice of the office bearers and the office bearers will try to solve the issue favorably at the earliest.

The Secretary was happy that in spite of the Covid situation, the torrential rains and the inclement weather, 24 members attended the meeting unmindful of the difficulties they faced. He said the issues relating to (a) 86-88 retirees (b) 14940 higher fixation (c) Senior Junior anomaly (d) reckoning pensionable service for fixation of pension, were receiving top priority of the organization. Also issues relating to income tax, health insurance and IFHRMS portal, would be settled, he hoped.

The treasurer Prof. Annie said that receipts were ready for all the payments made by the members and requested the members to collect their receipts. The Vice President, Prof. Patricia thanked the members for electing her and offered full support for all the activities of tanrecta. The Joint Secretary, Nedunchezhian assured that he will play his role as Joint Secretary, helping the President and Secretary to run the Unit in an efficient way.

The President then invited the views of the members, particularly their expectations from the Organization.

Prof. Mallika Madhavan informed about her issue relating to inclusion of 4 years of her pensionable service for calculation of her pension.

Prof. A Sudha mentioned about her issue relating Ph.D increments and also payment of gratuity to her in sixth Pay scales. Prof. Lakshmi spoke about the Junior Senior anomaly issue. She also suggested that two different letters may be posted in the WhatsApp group in response to the President's (Felicia) mention about the letter to be sent to the DCE and the Secretary, Higher Education by the individuals on 14940 issue.

Prof. Parvathy Gopalan said that the number of members in the unit is 151 and hence the unit is eligible to have a third General Council member. Prof. Padma Samson was proposed and seconded by members of the gathering and she was declared elected.

The following resolutions were unanimously passed:

1. Requesting the General Secretary to take up the issues of 86-88 retirees, 14940 fixation and Junior - Senior anomaly
2. Issues relating to income tax, health fund and IFHRMS The meeting came to an end with Vote of thanks by Joint Secretary. Tea and refreshments were served for the members after the meeting.

**Prof. R. Lawrence.**
Secretary - TAMBARAM